Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

ஏடு 7 EELA NADU இதழ் 105

National Tamil Daily தேசிய தினசரி

(27-5-65)

விசுவாவசு வைகாசி 14 முஸ். ஈமா பிறை 25 வியாழக்கிழமை

## பலியை நிறுத்தியும் பலி நீங்கவில்லை

குரும்பசிட்டி, புதன்

யாழ்ப்பாண பகுதியில் ஆலயங்களில் மிருகங்களைப் பலியிடும் வழக்கத்தை முற்றாக நிறுத்துவதற்குப் பல வருடங்களாகப் பலரும் முயற்சிசெய்து வந்தும் இன்னும் சில இடங்களில் இந்த வழக்கம் நடைமுறையிலிருந்து வருகிறது. குரும்பசிட்டி அரசினர் மருத்துவச் சாலைக்கு அருகிலுள்ள ஆலயத்தை வைரவர் கோவிலில் வருடாவருடம் நடைபெற்றுவரும் ஆடு, கோழிகள் பலியிடும் வழக்கத்தை இவ்வருடம் முதல் நிறுத்திவிடுவதென ஆலய பஞ்சாயத்துச்சபை முடிவுசெய்துள்ளது. மிருக பலி கொடுப்பதை நிறுத்துவதற்கு அயல் கிராமத்தவர்களும் ஆதரித்து வைகாசி தினங்களில் விசேஷ பூசை, அபிஷேகம், பொங்கல் முதலியன நடாத்தி வந்தனர். பலிநிறுத்தத்தை விரும்பாத சிலரும் மற்றும் சில விஷமிகளும் சென்ற சனிக்கிழமை அதிகாலை ஆலயத்தின் முன்னால் இரு ஆடுகளையும் சில கோழிகளையும் வெட்டிக் கொன்று அந்த இரத்தக் கறைகளை ஏற்படுத்திச் சென்றுள்ளனராம். பலி நிறுத்தப்பட்டு

(6-ம் பக்கம் பார்க்க)

# இலங்கையருக்கு அடையாள அட்டையா?

## இன்று நேருவின் முதலாவது சிரார்த்ததினம்

புதுடில்லி, மே 26

காலஞ்சென்ற ஸ்ரீ நேருவின் முதலாவது சிரார்த்ததினம் நாடெங்கும் உரிய புனிதமையாக அனுஷ்டிக்கப்படும். பல பொருட்காட்சிகளும், சாந்திவனத்தில் விசேஷ நிகழ்ச்சிகளும் நடைபெறவிருக்கின்றன.

காலை 8 மணிக்கு ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் சாந்திவனத்திலுள்ள நேரு சமாதியில் மலர்வளையம் ஒன்றை வைப்பார். மாலை 6-30-க்கு ராம்லீலா மைதானத்தில் திரு. சாஸ்திரியின் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும்.

இன்று டில்லிவரும் ஜவஹர் ஜோதி, நேரு வசித்த தீன்மூர்த்தி இல்லத்தில் நிரந்தரமாக வைக்கப்படும்.

தீன்மூர்த்தி இல்லத்திலுள்ள நேரு மியூஸியத்தில் நேருவின் வாழ்வுபற்றி 250 புகைப்படங்களைக் கொண்ட கண்காட்சி திறந்துவைக்கப்படும். இந்த மியூஸியத்தை இதுவரை 5 லட்சத்துக்குமேற்பட்ட மக்கள் பார்வையிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

எல்லா நிகழ்ச்சிகளும் அகில இந்திய ரேடியோமூலம் அஞ்சல்செய்யப்படவிருக்கின்றன.

அடுத்த மாதம் 10-ம் திகதி லண்டனில் நேரு பொருட்காட்சியை பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சன் திறந்துவைப்பார். 28-ம் திகதிவரை நடைபெறவிருக்கும் இக்காட்சி மவுண்ட்பேட்டன் பிரபுவின் தலைமையிலுள்ள நினைவுக்கமிட்டி சார்பாக நடைபெறவிருக்கிறது.

இத்தகையகாட்சிகள், அமெரிக்கா, ஐரோப்பா, ஆபிரிக்கா உட்பட பலநாடுகளில காட்டப்படும் என்றும், நேரு வாழ்க்கை பற்றி பல வரலாற்றுப் படங்களை சினிமா தயாரிப்பாளர்கள் மேற்கொண்டிருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது.

## இலங்கையரல்லாதாருக்கு மட்டும் வழங்கினல் போதும்

### பிரதமருக்கு பிக்குகள் பெரமுனை மகஜர்

கொழும்பு, புதன்

"இலங்கையர்கள் அனைவருக்கும் அடையாள அட்டைகள் வழங்கும் திட்டத்துக்குப் பதிலாக இலங்கையிலுள்ள இலங்கையரல்லாதாருக்கு அடையாள அட்டைகள் வழங்க சட்டரீதியாகக் கட்டாயப்படுத்தவேண்டும்" என்று பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவுக்கு மகாசங்க பெரமுனை அனுப்பியுள்ள மகஜர் ஒன்றில் யோசனை தெரிவித்துள்ளது.

இலங்கையரல்லாதவருக்கு இவ்வருட முடிவுக்குள் அடையாள அட்டைகள் வழங்கப்படுவதற்கு சட்டரீதியாக கட்டாயப்படுத்த வேண்டுமென்றும் இதன் மூலம் சட்டவிரோதக் குடியேற்றப் பிரச்சினையை தேசிய அரசாங்கம் சமாளிக்க முடியுமென்றும் அந்த மகஜரில் மகாசங்க பெரமுனை தெரிவித்துள்ளது.

(6-ம் பக்கம்பார்க்க)

உலக அதிபார குத்துச்சண்டை

## கிளே மீண்டும் உலக சம்பியன்

### 1 நிமிஷத்தில் லிஸ்டனை வீழ்த்தி சரித்திரத்தை ஸ்தாபித்தார்

லூயிஸ்டன், மே 26

23 வயதான காஸியஸ் கிளே 31 வயதான சொனி லிஸ்டனுடன் பொருதிய குத்துச் சண்டையில் தனது அதிபார உலக சாம்பியன் பட்டத்தை மீண்டும் நிலைநாட்டிக் கொண்டார்.

குத்துச்சண்டை சரித்திரத்திலேயே இதுவரை இல்லாத வகையில் ஒரே நிமிஷத்தில் அவர் லிஸ்டனை ("நொக் அவுட்") மூர்ச்சை இழக்கச் செய்தார்.

15 மாதங்களுக்குமுன் 1964-ம் ஆண்டு பெப்ரவரி மாதம், லிஸ்டனை 6-வது ரவுண்டில் தோள்பட்டையை முறித்துத் தோற்கடித்து உலக சம்பியனான கிளேக்கு இன்று நடந்த சண்டைதான் முதலாவது சவாலாக அமைந்தது. இலங்கை நேரப்படி இன்று காலை 8 மணிக்கு கோடிக்கணக்கான ரசிகர்கள் எதிர்பார்த்திருந்த இச்சண்டை ஆரம்பமாயிற்று.

கிளே, தனது எதிரியை 1 நிமிஷம் 49 விநாடியில் வீழ்த்துவதாக சில நாட்களுக்கு முன் சபதம் கூறியிருந்தார். ஆனால் 1 நிமிஷத்துக்குள் வீழ்த்தி குத்துச்சண்டையில் ஒரு சரித்திரத்தைப் ஏற்படுத்தினார்.

கிளே-லிஸ்டன் சண்டை "ஏர்லிபேர்ட்" என்ற அமெரிக்க வான்வெளிக்கிரகம் மூலம் அட்லாண்டிக் சமுத்திரத்துக்கப்பால் ஐரோப்பாவிலும், ஆபிரிக்காவிலும், மத்திய கிழக்கிலும் டெலிவிஷனில் காட்டப்பட்டது. பிரிட்டன், அயர்லாந்து, ஸ்பெயின், பிரான்ஸ், ஜெர்மனி, ஆஸ்திரேலியா, இத்தாலி, பெல்ஜியம், டென்மார்க், பின்லந்து, சுவீடன், குவாய்த், நைஜீரியா, ஐக்கிய அரபுக் குடியரசு ஆகிய நாடுகளில் கோடிக்கணக்கான மக்கள் இச்சண்டையை டெலிவிஷனில் கண்டனர்.

அமெரிக்காவில் மட்டும் 258 தியேட்டர்களில் இதைக் கண்டனர். அங்குள்ள 600 ரேடியோ நிலையங்களில் சண்டைபற்றி ரேடியோ வருணனை செய்யப்பட்டது.

கிளேயின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் எனக் கருதப்பட்டதால் அவர் தன்னை 72 மணி நேரத்திற்கு 50 லட்சத்திற்கு இன்சூர் செய்திருந்தார்.

உலக விளையாட்டுகளின் முடிசூடாமன்னன் என்ற பட்டத்தை சரித்திரப் பிரசித்தி பெற்ற வெற்றியின்மூலம் கிளே மீண்டும் நிலைநாட்டிக்கொண்டு விட்டார்.

15 ரவுண்டுகள் நீடிக்கும் என எதிர்பார்க்கப்பட்ட இச்சண்டை முதல் ரவுண்டில் முதல் நிமிஷத்திலேயே முடிந்தது.

---

## யாழ். நகர மேயர் மீது - நம்பிக்கையில்லாப் பிரேரணை

### ஒன்பது அங்கத்தவர்கள் கைச்சாத்திட்டுள்ளனர்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாண நகர மேயர் திரு. எஸ். ஸி. மகாதேவா மீது நம்பிக்கையின்மை தெரிவிக்கும் பிரேரணைக்கான முன்னறிவித்தல் நேற்று மாநகரசபை ஆணையாளர் திரு. ஏ. எச். ஏ. சமியிடம் நேற்றுக் கொடுக்கப்பட்டது.

மேயர் மீது நம்பிக்கையில்லையென்ற தங்களது பிரேரணையை விவாதிப்பதற்காக சபையின் விசேஷ கூட்டமொன்றை விரைவில் கூட்ட வேண்டுமென பிரேரணையைக் கொண்டுவந்துள்ள ஒன்பது அங்கத்தவர்களும் கேட்டுள்ளனர்.

பதினேழு அங்கத்தவர்களைக்கொண்ட மாநகரசபையில் மேயர் திரு. மகாதேவா மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்துள்ள ஒன்பது அங்கத்தவர்கள் விபரம் வருமாறு:

திருவாளர்கள் தா. ச. துரைராசா, கே. வி. தெய்வேந்திரம், தம்பு கந்தையா, ஏ. ஜி. இராஜசூரியர், அ. த. துரையப்பா, எம். எஸ். பேரின்பநாயகம், அ. நடராசா, எஸ். நாகராஜா, குவாஸி எம். எம். சுல்தான்.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதற்கு காரணம் எதுவும் குறிப்பிடவில்லையெனத் தெரிகிறது.

விசேஷ கூட்டம் பத்து தினங்களுக்குள் கூட்டப்படவேண்டும். விசேஷ கூட்டத்தில் பிரேரணை நிறைவேற்றப்படல் வேண்டும். ஒரு விசேஷ கூட்டம் கூட்டப்பட்டு அக்கூட்டத்தில் முந்திய கூட்டத் தீர்மானம் அங்கீகரிக்கப்படவேண்டும், அதன் பின்னரே மேயர் பதவி காலியானதாகக் கருதப்படும்.

சென்றமுறை மாநகரசபைத் தேர்தல் முடிந்ததும் சபையாரின் பெரும்பான்மை அங்கத்தவர்களான தமிழ்க்காங்கிரஸ் கட்சி அங்கத்தவர்களுக்கும் தமிழரசுக்கட்சி அங்கத்தவர்களுக்குமிடையில் "கனவான்கள் ஒப்பந்தம்" ஒன்று ஏற்பட்டது. இந்த ஒப்பந்தத்தின்படி திரு. தா. ச. துரைராசா முதல் ஆறு மாதமும் பின் ஒன்றரை வருடத்திற்கு திரு எஸ். ஸி. மகாதேவாவும் கடைசி [illegible] டத்திற்கு குவாஸி எம். எம். சுல்தான் மேயராகவும் பதவி வகிக்க உடன்பாடு ஏற்பட்டது. இதன்படி துரைராசா மேயர் பதவி வகித்துப் பின்னர் ராஜினாமாச் செய்துகொண்டார். திரு. மகாதேவா இன்னும் 6 மாதங்கள் பதவியிலிருக்க வேண்டும். எனினும் [illegible] பட்டுள்ளது.

## இலங்கை தேயிலை உதவி

கொழும்பு, புதன்

கிழக்கு பாகிஸ்தான் புயலினால் அவதிப்படும் மக்களுக்கு நிவாரண உதவியாக இலங்கை 2000 ராத்தல் தேயிலையை வழங்கவிருக்கிறது.

## நெடுந்தீவில் திமிங்கிலம்

நெடுந்தீவு, புதன்

பெரியவத்தைகளைக் கூடப் பிரட்டக்கூடிய அளவு மிகவும் பெரிய திமிங்கிலம் ஒன்று நெடுந்தீவு தெற்குக் கடற்கரையோரமாக வந்து அடைந்துள்ளது. ஏறக்குறைய 150 அடி நீளம் 6 அடி உயரம் 15 அடி அகலம் உள்ள இத்திமிங்கிலம் மிகவும் உருக்குலைந்த நிலையில் ஆனால் எலும்புக்கூடு ஒரு சேதமுமின்றிக் காணப்படுகிறது. பெருந்தொகையான மக்கள் இதனைச் சென்று பார்வையிடுகின்றனர்.

## காவற்காரர் கொலை

இரத்மலானை, செவ்

இரத்மலானையில் உள்ள கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் காவற்காரர் நேற்றுக்காலை இறந்து கிடக்கக் காணப்பட்டார். கடைப் பொருள்களும் களவாடப்பட்டிருந்தன.

காலஞ்சென்ற காவற்காரரான எம. ஜே. ஆரே கழுத்து நெரிக்கப்பட்டு கொலைசெய்யப்பட்டிருப்பதாகப் பொலிசார் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

மூன்று நபர்கள் வானுடன் நிறுத்தைக் கண்டதாக அயலில் உள்ள இ. போ. ச. பஸ் சாரதி ஒருவர் கூறியுள்ளார். உணவு, அலங்கார பொருள்கள் காரில் ஏற்றப்பட்டதாக அவர் மேலும் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

கடவுள் நமக்கு அளிப்பதிலும் எல்லை உண்டு; நமக்கு அளிக்க மறுப்பதிலும் எல்லை உண்டு.

— கிரீஷ் சந்திரகோஷ்.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily, Post Box 49, Jaffna.

சோபகிருது வருஷம் வைகாசி மீ 14 உ. (27-5-63)


## போக்குவரத்து சேவை சீரமைப்பு

இலங்கையில் போக்குவரத்துச் சேவையை ஒழுங்கு முறைப்படுத்த நீண்டகாலக் கொள்கைத் திட்டமொன்றை உருவாக்கும்பொருட்டு ஐ. நா. நிபுணர் ஒருவர் உட்பட நான்கு அங்கத்தவர்களைக் கொண்ட கமிஷன் ஒன்றை நியமிக்கப் போக்குவரத்து மந்திரி முடிவுசெய்தது வரவேற்கத்தக்கது.

இங்கு போக்குவரத்துச் சேவையைச் சீராக்குவதற்கு இதுவரை பல்வேறு விசாரணைக் குழுக்களும், சபைகளும் நிறுவப்பட்டதுமின்றி இங்கிருந்து வெளிநாடுகளுக்கும் சென்று அங்குள்ள முறைகளை ஆராய்ந்தும் வந்துள்ளன. அறிக்கைகளும் காலத்துக்குக் காலம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. என்றாலும் இதுவரை அந்த அறிக்கைகள் சரியாக அமுல்நடத்தப்பட்டனவாகவோ, சிபார்சுகளை நிறைவேற்றியதாகவோ தெரியவில்லை. போக்குவரத்துச் சேவையில் வேண்டிய சீரமைப்பும் இடம்பெறவில்லை. இந்த விஞ்ஞான யுகத்தில் ஆயிரக்கணக்கான மைல் தூரத்தை சிலமணி நேரத்தில் சென்றடையக்கூடிய வாய்ப்பு உலகின் பல நாடுகளிலும் உள்ளது. ஆனால் இங்கு சில மைல் தூரத்தை அடைவதற்குக் கூடப் பலமணி நேரம் மக்கள் தவம் கிடக்கவேண்டியுள்ளது.

திடீரெனப் புதிய போக்குவரத்துத் திட்டங்களையும், நவீன முறைகளையும் இங்கு ஏற்படுத்தவேண்டுமென மக்கள் எதிர்பார்க்கவில்லையென்பதைப் போக்குவரத்து மந்திரியும் உணர்ந்திருக்கவேண்டும். இதனால்தான் அவர் இப்பொழுதுள்ள தரை, கடல், ரயில், ஆகாயப் போக்குவரத்துச் சேவைகளுக்கிடையில் இணைப்புச் சேவையையும் ஏற்படுத்தி உள்ள வசதிகளை ஒழுங்குமுறைப்படுத்த திட்டமிட்டிருக்கவேண்டும். போக்குவரத்துச்சேவை சீராக இல்லாதால் தான் உள்நாட்டில் விளையும் உணவுப்பொருள்கள் கூட உச்சவிலைக்குப் போகிறது. பஸ் சேவைக்கும், ரயில் சேவைக்கும்கூட இங்கு தொடர்புச் சேவை குறைவு. இரண்டும் இரு தனிப் பிரிவுகளாக இயங்குகின்றன. இதே போல்தான் கப்பல் சேவையும், விமான சேவையும்கூட. போக்குவரத்துச் சேவைகள் யாவற்றுக்குமிடையில் தொடர்பும் இணைப்பும் இருக்கவேண்டியது அவசியம்.

# ‘நேருவும் உலக சமாதானமும்’

— கே. பி. எஸ். மேனன் —

**மண்டலசார்பற்ற கொள்கையும், மதசார்பற்ற ஜனநாயக கோட்பாடும் சோஷலிஸ்ட் சமூக அடிப்படை எண்ணமும் நேரு விட்டுச்சென்ற மூன்று பொக்கிஷங்களாகும். வருங்காலம் இதற்காக ஜவஹர்லால் நேருவுக்கு நன்றி செலுத்தும்.**

இன்று இந்தியாவின் ஸ்தானிகராக ரஷ்யாவில் பணிபுரிந்த ஸ்ரீ கே. பி. எஸ். மேனன் “நேருவும் தற்கால இந்தியாவின் அஸ்திவாரங்களும்” என்ற தலைப்பில் இந்திய வானொலியில் நிகழ்த்திய தொடர்ச்சியான உரையின் முடிவில் பேசுகையில் குறிப்பிட்டார். ஸ்ரீ மேனன் மேலும் பேசுகையில் கூறியதாவது:

தற்கால இந்தியாவின் ஆதாரபூர்வமான விஷயங்களை ஒருவர் ஆராய வேண்டின் அதனை ஒருவர் ஆங்கிலேயர் காலத்திலிருந்தே ஆராய வேண்டும். எங்கள் பாராளுமன்றம் பிரிட்டிஷ் காலத்திலிருந்த முறைகளையும் ஒழுங்குகளையுமே கடைப்பிடித்து வருகின்றது. எங்கள் நீதிபரிபாலனம்கூட பிரிட்டிஷ் மரபுகளையே பேணி நிர்வாகத்திலிருந்து விடுபட்டு சுதந்திரமாக செயலாற்றிக் கொண்டிருக்கின்றது. பரம்பரைப்பட்ட பரந்த பேசீகள் நிர்வாகத் துறையில் இருந்தபோதிலும் எங்கள் நிர்வாகம் ஓரளவிற்கு இந்திய சிவில் சேவையிலிருந்தே வளர்ந்திருக்கின்றது. சட்டமியற்றுவதிலும் நிர்வாக முறையிலும் உள்ள தொடர்புகள் பிரதிநிதித்துவ பாராளுமன்ற முறைகளையே சார்ந்திருக்கின்றது.

ஆனால் தற்பொழுது ஒரு துறையில் மாத்திரம் நாம் பிரித்தானிய முறைகளைப்பின் பற்றவில்லை. அதுதான் எங்கள் வெளிநாட்டுக் கொள்கை. இதனை சிருஷ்டித்தவர் ஜவஹர்லால் நேரு.

ஒரு வெளிநாட்டு நிர்வாகக் காரியாலயம் பழைய முறைகளையே பேணிக் கொண்டதாக இருக்கும். ஆனால் நான் இந்தியாவின் வெளிநாட்டு முதல் காரியதரிசியாக இருந்த காலத்தில் எங்கள் வெளிநாட்டுக் கொள்கைகளைப்பற்றி நான் முன்நிகழ்ந்த முறைகளைக் கொண்டு ஒரு விஷயத்தைச் செய்ய இயலாது போய்விட்டது. ஏனென்றால் நாங்கள் சுதந்திரம் அடையும்வரை எங்களுக்கு ஒரு வெளிநாட்டுக் கொள்கையிருக்கவில்லை. சுதந்திரம் பெற முன்னர் நடைமுறையிலிருந்த வெளிநாட்டுக் கொள்கைகள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தினரால் கையாளப்பட்டதால் அவை எங்களுக்கு ஒவ்வாததாக இருந்தன.

இதன்விளைவாக எங்கள் வெளிநாட்டுக் கொள்கையினை ஆக்கும் யாவும் தனி ஒரு மனிதனின் பொறுப்பிலேயே ஒப்படைக்கப்பட்டது. அவர்தான் எங்கள் நேரு. தான் பெற்ற அனுபவத்தினாலும் ஆழ்ந்த அறிவைக் கொண்டும் சர்வ உலகப் பிரச்னைகளினாலும் நேரு வெளிநாட்டுக் கொள்கையின் இயக்குனரானார்.

மகாத்மாவின் சேர்க்கையினால் நேரு தனது கடமைகளை கண்ணியமாகவும் புத்தியுடனும் செய்ய முடிந்தது.

இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னர் உலகத்தின் இடத்திலே இந்திய பிரதான இடத்தை வகுக்க வேண்டிய முறையில் ஒரு பெருமாற்றம் ஏற்பட்டது. அத்துடன் இந்தியாவின் பொறுப்புகளும் கடமைகளும் கூடியதுடன் வெளிநாட்டுக் காரியாலயமும் நிர்வாகமும் விஸ்தரிக்கப்பட்டது. இந்தியாவில் தற்பொழுது இந்தியாவின் வெளிநாட்டுக் காரியாலயத்தில் வெளிநாட்டு மந்திரி, ராஜாங்க மந்திரி, உதவிமந்திரி வெளிநாட்டுக் காரியதரிசி, காமன்வெல்த் காரியதரிசி, விசேஷ காரியதரிசி, பாராளுமன்றக் காரியதரிசி, ஏழு கூட்டுக் காரியதரிசிகள் ஒன்பது நிர்வாகி இரண்டு விசேஷ பணியாளர்கள், இருபத்தொரு உதவிக் காரியதரிசிகள், 84 உபகாரியதரிசிகள், 20 தொடர்பாளர்கள் ஆகியோர் வேலை செய்கின்றனர்.

1946-ம் ஆண்டு செப்டம்பர் 7-ம் திகதி காங்கிரஸ் இந்திய அரசாங்கத்துடன் சேர்ந்த பொழுது நேரு வெளிநாட்டுக் கொள்கையைப்பற்றி பின்வருமாறு குறிப்பிட்டார். “இயலக்கூடிய அளவிற்கு நாங்கள் மண்டலசார்பற்ற முறையிலேயே மற்ற நாடுகளுடன் தொடர்பு வைத்துக் கொள்ள விரும்புகின்றோம். இதனைக் கடைப்பிடிக்காததன் காரணத்தினாலேயே கடந்த காலத்தில் உலக சண்டைகளும் கோரச் சம்பவங்களும் நிகழ்ந்தன.”

இச்சொற்கள் அகில உலகிறகும் பரவி இன்று வெளிநாட்டுக் கொள்கையாக சுதந்திரம் பெற்ற நாடுகள் ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் கடைப்பிடித்து வருகின்றன. சமாதானத்தை நிலைநாட்டுவதற்கும் நாடுகளுடன் ஒன்று சேரக் கொள்கையைக் கடைப்பிடிப்பதற்காகவுமே நேரு இக்கொள்கையை மேற்கொண்டார்.

‘சமாதான சகவாழ்வு’ என்ற நேருவின் குரல் இந்தியாவிற்கு புதிதல்ல. இந்திய கலாச்சாரம் பண்பாடு போன்ற ‘சமாதான சகவாழ்வு’ என்ற கொள்கை 2200 ஆண்டுகளுக்கு முன்னரே அசோகனாலேயே பறப்பட்டு கல்விலை இக்கருத்துக்கள் பொறிக்கப்பட்டு இன்றும் எங்களுக்கு அறிவுறுத்திக்கொண்டிருக்கிறது.

நேரு கொலம்பியா சர்வகலாசாலையில் 1949ம் ஆண்டு பேசும் பொழுது குறிப்பிட்டதாவது “பொறுமை என்பது அசட்டுத் தனமல்ல மண்டல சார்பற்ற கொள்கை யெனக் கூறுவதால் அதன்கருத்து நடுநிலைமை என்பதல்ல. ஒருமனிதன் சுதந்திரத்திற்கோ அல்லது சமாதானத்திற்கோ பேராபத்து ஏற்பட்டால் நாங்கள் நடுநிலைமையான நிலையில் நிற்க முடியாது. அத்தருணத்தில் நாம் நடுநிலைமை வகித்தால் நாம்பேணிப்பாதுகாத்தனவற்றையும் நடுநிலைமைக் கொள்கையையும் காட்டிக் கொடுப்பவர்களாவோம்.”

1962ம் ஆண்டில் சீனர்கள் எங்கள் நாட்டின் மீது ஆக்கிரமிப்பு செய்த போது. எங்கள் வெளிநாட்டுக் கொள்கை பலத்த கண்டனத்திற்குள்ளானது.

நான் அண்மையில் சுவிட்சர்லாந்து தேசத்திற்கு சென்றபொழுது அங்கே ஒரு வாக்கியம் ஓர் அட்டையில் எழுதப்பட்டு தொங்கவிடப்பட்டிருந்ததைக் கண்டேன். “சுதந்திரத்தின் அத்திவாரம் பாதுகாப்பின் உறுதியிலேயே தங்கியிருக்கிறது” என்பது அந்த மணிமொழி. இதைத்தான் சீனா இந்தியாவிற்கு பாடம்புகட்டியுள்ளது.

★

# உலக ஒளி விளக்கு

— இ. நாகராஜன் —

அவனியுய்ய அகிம்சை யேற்ற
அண்ணல் காந்தி வழியிலே
அனைத்து நாடும் அணைத்துப் போற்ற
அறிவு ஞான ஒளியென
நவமதான திட்டந் தீட்டி
நாட்டில் மேன்மை நண்ணவே
நாளும் சேவை யாற்றி மக்கள்
நமது தந்தை யென்னவே
கவனமாகக் கடமை யோம்பிக்
காந்தி காத்த பெருமையை
களங்கமின்றித் துலங்கி வைத்த
கடமை வீரன் நேருவும்
புவனம் நீங்கிப் போயோராண்டு
போனதிந்த நாளிலே
புறத்துவந்த பதமை நீக்கி
புனிதன் தன்னைப் போற்றுவோம்.

2. சென்ற சென்ற இடமனைத்தும்
திரண்டு மக்கள் கூடினர்
‘ஜே! ஜேநேரு’ என்று வாழ்த்தி
சிந்தையன்பு காட்டினா
அன்றுபூத்த மலர்தொடுத்த
அலங்கல் சூட்டி ஏத்தியே
அன்புகாட்டி இன்புகூட்டி
அணைத்துவூட்டி மகிழ்ந்திட
என்றுமெங்கள் நேருவென்ற
இமயவீரன் இருக்கையில்
என்ன துன்பம்? எமக்கு என்று
எண்ணும்வேளை நீங்கியே
சென்றநேரு தன்னையின்று
சிந்தைகொண்டு நாமெலாம்
திரண்டு கூடிப் போற்றியேற்றி
சீராமன்பு காட்டுவோம்.

3. பொய்யிலாத உளத்திலன்பு
பூத்த ஞான பண்டிதன்
புன்மை போக்கி நன்மையாக்கிப்
பொலிவுகண்ட உத்தமன்
மெய்யதோடு வீரம்மேவி
விளங்குசீல வித்தகன்
வேறுபாடு கொண்ட நாடும்
விரும்பியேற்ற சீலனிவ்
வையமக்கள் ஒன்றதாகி
வாழநல்ல வழியினை
வகுத்தளித்த காந்தியன்பு
வற்றிடாத மைந்தனாய்
உய்யவந்த மெய்ம்மைநேரு
உலகிலோங்கச் சோதியாய்
உம்பர்வாழ அவைக்கு நாளை
உவந்துகூடி ஏத்துவோம்.

போக்குவரத்துச் சேவையை ஒழுங்கு முறைப்படுத்துவதற்கான நீண்டகாலக் கொள்கைத் திட்டமொன்றை ஆராய்வதற்கு நியமிக்கப்படும் நான்கு அங்கத்தவர் கொண்ட கமிஷனின் விதிகளையும், கடமைகளையும் மந்திரி தமது அமைச்சு அதிகாரிகளுடன் ஆலோசனைசெய்து தயாரித்துள்ளார். தமது யோசனையை அவர் விரைவில் செயல்படுத்தவும் தீர்மானித்துள்ளார். விசாரணைக் கமிஷன் நியமிப்பதாலும், அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதாலும் நோக்கம் நிறைவேறிவிடாது. இதற்குமுன் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளுக்கும், சிபார்சுகளுக்கும் நேர்ந்த கதி இக்கமிஷனின் நோக்கமுள்ள திட்டத்துக்கும் நேர்ந்துவிடக்கூடாது.

## பணியிலேவாழும் நேரு



‘நீதியிலே சமைந்த நேரு
நிலத்திலே கலந்த நேரு
நேரிலே இன்றி மக்கள்
மக்கள் நெஞ்சிலே உள்ள நேரு
பாரத சக்தியாகப்
பரிணமிக்கின்ற நேரு
பாரிலே அமைதியென்னும்
பண்பிலே வாழ்கின்றாரே!

—சுத்தானந்தபாரதி

* * *

‘விண்ணும் மண்ணும் நீயாகி—
விரியும் மலரின் மணமாகி
கண்ணின் கருமா மணியாகி—
கழனிகள் தோறும் பயிராகி
பண்ணுக்குரிய பொருளாகி —
பாரத நாட்டின் எதிர்கால
எண்ணம் எல்லாம் நீயானாய்—
என்றும் துணையாய் நிற்கின்றாய்

— குயிலன்

* * *

மலர் இருக்கும் இடமெல்லாம்
மலர் முகத்தைக் காட்டிடுவார்
மழலைச் சிறுவர்களின்
மணிக்குரலாய் ஒலித்திடுவார்.

—சுப்பு ஆறுமுகம்

* * *

மானிடம் உள்ளமட்டும்—
மாருதம் வீசுமட்டும்
ஞானிகள் கண்டநீதி —
நல்லறம் வாழுமட்டும்
காணுமிக்க குவலயங்களும் —
சூழ்கைகள் உள்ளமட்டும்
வாழுயர் ஜோதிலங்கள்—
வாழ்கவே நேருநாமம்.

டி — எஸ். சுந்தரம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நேருவின் பஞ்ச சீலம்

1. பரஸ்பரம் ஒரு நாட்டின் பிரதேச உரிமையையும், சுதந்திர ஆதிபத்தியத்தையும் மதித்தல்.
2. பரஸ்பரம் அனுக்கிரமிப்பு.
3. பிற நாடுகளின் உள்நாட்டு விஷயத்தில் தலையிடாமை.
4. சமத்துவம், பரஸ்பர நன்மை.
5. சமாதானமாக உடனிருந்து வாழ்தல்.

யுத்தம், எந்தப் பிரச்னையையும் தீர்க்காதென்பதும், எந்தப் பிரச்னையையும் சமாதான வழியிலேயே தீர்க்கப்பட வேண்டுமென்பதுமே உலகெங்குமுள்ள மக்களின் மனதில் ஏற்பட்டுவரும் பெரும் மாற்றமென நான் கருதுகின்றேன்.

இவ்விஷயத்தில் இந்தியாவிலுள்ள மக்களை நான் குறிப்பிடவில்லை, ஏனெனில் ஏற்கனவே இந்திய மக்கள் சமாதான வழியிலேயே சிந்தித்து வருகின்றார்கள். ஆனால் ராணுவ பலத்தில் நம்பிக்கை வைத்திருந்த சக்திவாய்ந்த இதர நாடுகளின் மக்களுங்கூட இப்போது வேறு முறையில் பேச ஆரம்பித்திருக்கின்றார்கள்.

இங்கிலையில இந்தியாவின் ஸ்தானம் என்ன? உலகக் கொள்கையிலிருந்து இந்தியா பெருமளவு மாறுபட்டு நிற்கிறதெனக் கூறுவது மிகைப்படுத்தப்பட்டதாகும்.

பஞ்சசீலக் கொள்கையின் அடிப்படையிலேயே இவ்விஷயத்தில் நாம் எமது பங்கைச் செய்திருக்கிறோம். இந்தக் கொள்கையில் புதியது ஒன்றுமில்லை. ஆனால் அதை நடைமுறையில் அமுலாக்குவது தான் இப்போது நாம் கொண்டிருக்கும் புதிய ஏற்பாடு.

உடனிருந்து வாழும் இக்கொள்கை மேற்கொள்ளப்பட்டது முதல் உலகத்தில் அது மேலும் மேலும் பரவி, பலரது மனதில் ஆழமாகப் பதிந்துவருகிறது.

உலக விவகாரங்களில் பஞ்சசீலம் முக்கிய ஸ்தானத்தை வகிக்க ஆரம்பித்திருக்கிறது. அமைதித் தீர்வு, பிறர் விஷயத்தில் தலையிடாமை போன்ற கோட்பாடுகளைப் பரப்பியதில் நமக்குக் குறிப்பிடத்தக்க பங்கு உண்டென நினைக்கிறேன். ஒவ்வொரு நாடும் பிறரது விஷயத்தில் தலையிடாமல் தங்கள் சொந்தத் தலைவிதியைத் தானே வகுத்துக்கொள்ள வேண்டும். பெரிய உண்மைகள் எதுவுமே புதிய விஷயமாயிருக்காது.

அரசியல் ரீதியிலோ, பொருளாதார ரீதியிலோ அல்லது தத்துவார்த்த ரீதியிலோ பிறர் விஷயத்தில் தலையிடாதிருப்பது இன்றைய உலக நிலையில் முக்கிய ஒரு விஷயமாகும்.

நீங்கள் ஒரு சபதத்தைச் செய்கிறீர்கள். நாளடைவில் அதற்கு நாடு முழுதும் ஆதரவு ஏற்படுகிறது. சிலர் அதற்குக் கீழ்ப்படியாமலிருக்கலாம், ஆனால் நாளடைவில் அவர்களும் இதில் நம்பிக்கைகொள்கிறார்கள்.

உண்மை என்பது ஒரு நாட்டுக்கும், ஒரு மக்களுக்கும் மட்டுமே சொந்தமானதல்ல. தங்களுக்குத் தாங்களே அவர்கள் உண்மையானவர்களாய் இருந்தால் அனுபவம், கஷ்டம் தவறு ஆகிய வழிகள் மூலம் தாங்களே அதைப் பரீட்சிக்க வேண்டும். அப்படியானால் தான் வளர்ச்சி சாத்தியம். மற்றவர்களையும் சும்மா பின்பற்றுவதானால் வளர்ச்சி சாத்தியமில்லை.

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக நாம் காந்திஜியின் கீழ் வளர்ந்தோம். அவர் நமக்கு என்ன செய்தார்-என்ன செய்யவில்லை என்று சிந்திப்பதைவிட அவரது தலைமையின் கீழ் நாடு ஒன்றுதிரண்டது என்பதே முக்கியம்.

கடந்த சில ஆண்டுகளாக நாம் கடைப்பிடித்த பொதுவான கொள்கைகள் இதர நாடுகளிலும் பின்பற்றப்பட்டுள்ளன, சிலர் இதை ஏற்கவில்லையாயினும் இந்தியாவின் விஸ்வாசமான கொள்கை பற்றி அவர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. எந்த நாட்டின் மீதும் கெட்ட எண்ணம் இல்லாத நேச உறவுக் கொள்கையே பஞ்சசீலம்.

— ஒரு சொற்பொழிவு

## பத்திரிகையாளர் ஆதரவு

பெர்லின் மே 26

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் பத்திரிகையாளர்கள் சங்கம் தனது 6000 உறுப்பினர்கள் சார்பாக வியட்னாமில் அமெரிக்கா நடாத்தும் ஆக்கிரமிப்பைக் கண்டித்துள்ளது. இச் சங்கம் வட வியட்னாமிலுள்ள பத்திரிகையாளர் சங்கத்துக்கு அனுப்பியுள்ள ஒரு தந்தியில் வியட்னாம் மக்களுக்கு முழு ஒத்துழைப்பையும் அளிப்பதாக உறுதி கூறியுள்ளது.

"நாங்கள் உங்கள் பக்கம் உறுதியாக நிற்கிறோம், தேசிய சுதந்திரத்தைப் பாதுகாக்க நீங்கள் நடத்தும் போராட்டம் நிச்சயம் வெற்றி பெறும்" என்று தந்தியில் குறிப்பிடப் பட்டுள்ளது.

## சர்வதேசப்புத்தகக் கண்காட்சி

லயிப்ஸிக் மே 26

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் லயிப்ஸிக் நகரில் ஜூலை 8-ந் திகதிதொடக்கம் ஆகஸ்ட் 8-ந் திகதி வரை முதன் முதலாக சர்வதேசப் புத்தகக்கண்காட்சியொன்று நடைபெறும். காஞ, ஈராக், ஐக்கிய அரபுக் குடியரசு, இந்தோனேஷியா, கம்போடியா முதலிய நாடுகளின் பிரதிநிதிகள் கண்காட்சியில் கலந்துகொள்வர். மேற்கு கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து ஏராளமான பேர் கண்காட்சிக்கு விஜயம் செய்வார்கள்.

40 நாடுகளிலிருந்து வரும் சித்திரக் கலைஞர்கள் இங்கு நடைபெறும் சித்திரப் போட்டியில் பங்குபற்றுவார்கள்.

## பர்மியத் தாதிகளுக்குப்பயிற்சி

ரங்கூன், மே 26

பர்மிய அரசாங்கம் பர்மியத் தாதிகள் 10 பேர்களைவிசேட பயிற்சி பெறுவதற்காக ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுக்கு அனுப்பிவைத்துள்ளது. அவர்கள் அங்கு மருத்துவத்தாதிப் பயிற்சி மட்டுமின்றி சோஷலிஸ்ட் கல்வியையும் பெறுவார்கள் என்று பர்மிய சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது,

ஒரு சோஷலிஸ்ட் நாட்டுக்குப் பயிற்சி பெறுவதற்காக பர்மாவிலிருந்து தாதிகள் செல்லுவது இதுவே முதற் தடவை.

## சாஸ்திரிக்கு ஜப்பான் அழைப்பு

டோக்கியோ. மே 26

ஜப்பானுக்கு விஜயம் செய்யுமாறு திரு சாஸ்திரிக்கு ஜப்பானியப் பிரதமர் திரு ஸாட்டோ அழைப்பு விடுத்திருக்கிறார்.

## இதுவரை 385 யு.எஸ். பலி

வாஷிங்டன், மே 26

இதுவரை தென் வியட்னாமில் 385 அமெரிக்கர்கள் கொல்லப்பட்டிருப்பதாகவும், 2000க்கு மேற்பட்டோர் காயமடைந்திருப்பதாயும் இங்கு அறிவிக்கப்பட்டது.

# கட்ச் ரன் பகுதியில் மற்றோர் கைகலப்பு பற்றி தகவல்

## விடுதலைத் தின தபால்தலைகள்

பெர்லின் மே 26

ஜெர்மன் மக்கள் பாஸிசத்திலிருந்து விடுபெற்ற 20 வது ஆண்டு விழாவை முன்னிட்டு ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு விசேஷ தபால்த் தலைகளை வெளியிட்டது.

ஜெர்மன் தொழிலாளர் வர்க்கத்தின் போராட்டங்களையும், சோவியத் ராணுவம் ஜெர்மன் மக்களை பாஸிசத்திலிருந்து விடுதலை செய்ததையும் இந்தத் தபாற் தலைகள் சித்தரிக்கின்றன.

## எழுத்தாளரின் சர்வதேசமாநாடு

பெர்லின், மே 26

பெர்லினில மே மாதம் 14-ந் திகதி முதல் 22-ந் திகதிவரை நடைபெற்ற சர்வதேச எழுத்தாளர் காங்கிரஸில் 5 கண்டங்களிலும் 48 நாடுகளைச் சேர்ந்த 200 எழுத்தாளர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டங்கள், சம்பாஷணைகள் கருத்தரங்குகள் முதலிய நிகழ்ச்சிகள் காங்கிரஸில் இடம்பெற்றது. அவற்றில் பங்குபற்றிய எழுத்தாளர்கள் யுத்தத்தையும், பாஸிசத்தையும் கண்டித்துப் பேசினர்'

## பொலிவியாவில் 40 பேர் பலி

லண்டன், மே 26

பொலிவியாவில் இதுவரை 40 பேர் மாண்டதாயும், 100க்கு மேற்பட்டோர் காயமடைந்ததாயும் அறிவிக்கப்படுகிறது. வேலை நிறுத்தக்காரர்களுக்கும் அரசாங்கத்துக்குமிடையே ஏற்பட்ட ஒப்பந்தப்படி துருப்புக்கள் சுரங்கங்களிலிருந்து வாபஸ் பெற்றுக்கொள்ளப்பட்டன. வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

## அத்துமீறலுக்கு ஆட்சேபனை

புதுடில்லி, மே 26

இந்திய வானப்பிராந்தியத்தின் மீது பாகிஸ்தான் விமானங்கள் அத்துமீறி வருவது குறித்து ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த 13, 15, 18-ம் திகதிகளில் கட்ச் பகுதியிலும், 14, 18-ம் திகதிகளில் பஞ்சாபிலும் இத்தகைய அத்துமீறல் நடைபெற்றதாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறது.

## காங்கோவில் பொதுத் தேர்தல்

ஆக்ரா, மே 26

ஜூன் 8-ம் திகதி காங்கோவில் பொதுத் தேர்தல் நடைபெறும் என ஜனாதிபதி விக்ருமா அறிவித்தார் 1956-ம் ஆண்டுக்கு பின் இதுதான் அங்கு நடைபெறும் முதல் தேர்தல்.

## 4-ம் முறையும் முயற்சிப்பர்

புதுடில்லி, மே 26

வருகிற 28 அல்லது 29-ம் திகதி இந்திய மலையேறும் கோஷ்டி 4-வது தடவையாக எவரெஸ்டை அடைய முயற்சிக்கும் என இமாலய மலையேற்றக் கழகம் அறிவித்திருக்கிறது.

## நாகர்-பொலிஸ் மோதல்

மணிப்பூர், மே 26

பலைகாரகர்களுக்கும் பொலிஸாருக்குமிடையில் [illegible] தெற்கு பகுதியில் சண்டைகள் நடைபெற்றதாக அறிவிக்கப்படுகிறது.

## 2 பாகிஸ்தான் கவசமோட்டார்கள் சேதமடைந்தனவாம்

புதுடில்லி, மே 26

கட்ச் ரன் பகுதியிலுள்ள பியர் பேட்டில் இந்திய ரோந்து கோஷ்டி ஒன்றை கவச மோட்டார்கள் சகிதம் பாகிஸ்தான் துருப்புக்கள் தாக்கின என்றும், ரோந்து துருப்புக்கள் எதிர்த்துத்தாக்கி 2 கவச மோட்டார்களை அழித்து பாகிஸ்தானியர்களை விரட்டியடித்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

நேற்றுக்காலை இச்சம்பவம் நடைபெற்றதாயும் இந்திய ரோந்துக் கோஷ்டியில் சுமார் 25 பேர் மட்டுமே இருந்ததாயும், எவருக்கும் சேதமில்லை என்றும் மேலும் அறிவிக்கப்பட்டது.

பாகிஸ்தான் துருப்புக்களுக்கு ஏற்பட்ட சேதம் என்னவென்பது தெரியவில்லை என்றும், மேலும் தகவல்கள் எதிர்பார்க்கப்படுவதாயும் மேலும் அறிவிக்கப்பட்டது.

ஆனால் பியர்பேட்டில் இந்தியர்களே முதலில் தாக்கினர் என்றும் இத்தாக்குதல் முறியடிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் பின்வாங்கிவிட்டனர் என்றும் பாகிஸ்தான் வெளிநாட்டு இலாகா அதிகாரி ஒருவர் கூறினர்.

பாகிஸ்தான துருப்புக்களுக்குச் சேதம் எதுவும் இல்லை என்றும் அவர் மேலும் கூறினர்.

# பைஸால் மன்னர் இந்தியா வருவார்

ரியாத். மே 26

இங்கு விஜயம் செய்திருக்கும் இந்திய உபஜனாதிபதி டாக்டர் ஸகிர் ஹூஸெய்ன் மன்னர் பைஸாலுடன் பேச்சுக்களை முடித்துக்கொண்டு விட்டார்.

இரு நாடுகளுக்குமிடையே பரஸ்பர அக்கறையுள்ள விஷயங்கள் பற்றியும் இந்திய-பாகிஸ்தான் உறவு பற்றியும் அவர்கள் பேசியதாய்த் தெரிகிறது.

பைஸால் மன்னருக்கு வாசனைத்திரவியங்கள் அடங்கிய வெள்ளிப்புட்டிகள், தந்தப் பொருட்கள், இதர வெகுமதிகள் ஆகியவற்றை டாக்டர் ஹூஸெய்ன் அளித்தார்.

இந்தியா வருமாறு விடுத்த அழைப்பை பைஸால் மன்னர் ஏற்றுக்கொண்டார்,

"காந்தி, நேரு பிறந்த நாட்டிலிருந்து வந்துள்ள பெரிய மனிதர்" என உபஜனாதிபதியை பைஸால்மன்னர் வருணித்தார்.

## தென்வியட்னாம்

சைகோன். மே 26

தென்வியட்னாம் மந்திரிசபை திருத்தியமைக்கப்படுவதை அந்த நாட்டின் ஜனாதிபதி நிராகரித்துவிட்டார். பிரதமர் குவாட் மந்திரிசபையில் 4 மந்திரிகளை மாற்றியிருப்பதாய்க் கூறப்படுகிறது.

## இந்தோனேஷியாவுக்கு 84 மந்திரிகள்

ஜாகர்த்தா, மே 20

இந்தோனேஷிய மந்திரிசபையில் மேலும் 7 புதியமந்திரிகள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இப்போது இந்தோனேஷிய மந்திரிசபையில மொத்தம் 84 மந்திரிகள் இருக்கிறார்கள். இவர்களில் இருவர் கம்யூனிஸ்டுகள்.

## நைஜீரியப் பிரதமர் யோசனை


லாவோஸ மே 26

காமன்வெல்த் பிரதமமந்திரிகள் மகாநாடு எல்லா காமன்வெல்த் நாடுகளிலும் மாறி மாறி நடைபெற வேண்டுமென சேர் அபூபக்கர் தபாவா பலேவா கூறியிருக்கிறார்.

## கம்போடியாவில் 40 பேர் கைது

நாம்பென், மே 26

தாய்லாந்தின் தூண்டுதல் பேரில் கம்போடியாவில்புரட்சி நடத்த சதி செய்ததாய் 40 பேர் கைதுசெய்யப்பட்டிருப்பதால் இளவரசர் சிஹனூக் அறிவித்திருக்கிறார்.



அமெரிக்க வானவெளி வீரர்கள் நீருக்குக்கீழும் பயிற்சியிலீடுபட்டுவருகிறார்கள். புதியசாதனத்தின் துணைகொண்டு அவர்கள் பயிற்சியிலீடுபட்டிருப்பதைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறைப் பகுதியில் 'டெலிபோன்' சேவை சீரமைப்பு

## புதிய திட்டம் விரைவில் அமுலாகும்

கொழும்பு, வியாழன்

40,000 ரூபாய் செலவில் பருத்தித்துறைத் தொகுதிக்கு விஸ்தரிக்கப்பட்ட திருப்திகரமான டெலிபோன் சேவையை ஏற்படுத்த தபால்தந்திப்பகுதியினர் திட்டம் தயாரித்துள்ளார்கள். இத்திட்டத்தை விரைவில் அமுல் நடத்த வேண்டுமெனவும் அதற்கான தொகையை உடனடியாக ஒதுக்க வேண்டுமெனவும் பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் மந்திரி திரு. மொண்டேகு ஜயவிக்கிரமாவைக் கேட்டிருக்கிறார்.

திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் நிதி ஒதுக்கப்படாததே இந்த அபிவிருத்தி இடம்பெறாமல்போனதற்குக் காரணம் என்பதையும் மந்திரி திரு. துரைரத்தினம் எடுத்துக் கூறியுள்ளார்.

பருத்தித்துறைப் பகுதிக்கு விஜயம்செய்து மேலும் டெலிபோன்களை அமைப்பது சம்பந்தமாக ஆராய்ந்துவந்த அதிகாரிகள் இவ்வேலைகள் தாமதமாகுவதற்குக் காரணம் டெலிபோன் 'எக்ஸ்சேஞ்சை' அமைக்க இடம்பெறாததுதான் என்று தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு வேண்டிய இடத்தைக் கொடுக்க எவரும் முன்வருகிறார்களில்லையாம். அப்படி முன்வருபவர்களும் அரசாங்க மதிப்பீட்டைவிட பன்மடங்கு விலைவைப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்தப் பிரச்னை தீர்ந்தால் அக்டோபர் மாதத்துக்கிடையில் மேலும் 50 புதிய டெலிபோன்கள் இணைக்கப்பட்டுவிடும் என தபால்தந்திப் பகுதி அதிகாரியொருவர் 'ஈழநாடு' நிருபரிடம் தெரிவித்தார்.

# 'என்றுமிலாத ஐக்கியம் நிலவுகிறது'

யாழ்ப்பாணம், செவ்

"எக்காலத்திலும் இல்லாத தமிழர் சிங்களவர் ஒற்றுமை இன்று நிலவுகிறது. தேசிய வளர்ச்சிக்கும் ஒற்றுமைக்குமாக தமிழர் பிரச்னையை நியாயமான முறையில் தீர்த்து வைக்கவேண்டுமென்ற உயர் முடிவுக்காக நாம் ஐக்கிய தேசியக் கட்சியை விஷேசமாகத் திரு. டட்லி சேனநாயக்காவைப் பாராட்டுகிறோம்"

இவ்வாறு திருநெல்வேலித் தமிழரசு வாலிப முன்னணித் தலைவரான திரு. செ. பொன்னையா முன்னணியின் நிர்வாகசபைக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

# விளம்பரம்

## சிங்களத்தில் மாத்திரமே மந்திரிக்கு எம். பி. தந்தி

யாழ்ப்பாணம், வியா

இம்மாதம் 21ம் தேதி வெளியான அரசாங்க வர்த்தமானியில் சித்திர ஆசிரியர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் சிங்களத்தில் மட்டுமே பிரசுரிக்கப்பட்டிருந்ததைச் சுட்டிக்காட்டி அதைத் தமிழிலும் வெளியிட்டுச் தமிழ் சித்திரத் தகுதியானர்களும் விண்ணப்பிக்க வகைசெய்யுமாறு கல்வி மந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொலைக்கு கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை தந்தி அனுப்பியுள்ளார். தமிழ் சித்திரத் தகுதியானர்கள் விண்ணப்பிக்கக் கூடியதாக முடிவுத் தேதியை 11-6-65லிருந்து மேலும் நீடிக்க வேண்டுமெனவும் அவர் தமது தந்தியில் கோரியுள்ளார்.

# ஆயுள்வேத கல்லூரி பரீட்சை

## எம். பி.க்கு மகஜர்

உடுப்பிட்டி, புதன்

உடுப்பிட்டி இளந்தமிழர் இயக்கம் தமிழரசுக்கட்சித்தலைவர் திரு. சா. ஜே. வே. செல்வநாயகத்துக்கும் சுகாதார அமைச்சருக்கும் பின்வருமாறு மகஜர் அனுப்பிவைத்துள்ளது.

"30-4-65-ல் வெளியான இலங்கை அரசாங்க வர்த்தகமானியில் ஆயுள் வேதக் கல்லூரியில் சேருவதற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது இதற்குரிய போதனையும், பிரவேசப் பரீட்சையும் தனிச்சிங்களத்தில்தான் உண்டு. சிலகாட்களுக்குமுன் சுகாதார மந்திரி இன்னும் ஆறு ஆயுள்வேத ஆஸ்பத்திரிகள் திறக்கப்போவதாக பத்திரிகைச் செய்திகள் தெரிவித்துள்ளன. எல்லோருக்கும் சமசந்தர்ப்பம் கொடுக்கும் தேசிய அரசாங்கம் தமிழ் மாணவர்களை இவ்விஷயத்தில் புறக்கணித்திருப்பது மனவருத்தத்திற்குரியது. இதன் விண்ணப்பமுடிவு திகதி இம்மாதம் 31-ந் திகதியாய் இருப்பதால் இவ்விஷயத்தில் தமிழ் மாணவருக்கு ஆகவேண்டியதைச் செய்துதருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

# மீசாலைகொலை வழக்கு

சாவகச்சேரி, புதன்

மீசாலை கொலைவழக்கு நேற்றுக் காலை சாவகச்சேரி மஜிஸ்திரேட் கோர்ட்டில் நீதிபதி திரு பி. ஜெபேட் சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்ட பொழுது பொலிஸ் தரப்பினர் சாட்சியமளித்தனர். வரைபடமும் சமர்ப்பிக்கப்பட்டது.

இவ்வழக்கில் மீசாலையில் வேலன் மாணிக்கம் என்பவரைக் குத்திக் கொலை செய்ததாக அவரது சகோதரர் வேலன் பொன்னையா மீது குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது.

மேல் விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# க்ஷயரோகிகள் பெறும் மாதஉதவி

யாழ்ப்பாணம், வியாழன்

காசநோயால் பாதிக்கப்பட்ட ஆஸ்பத்திரிக்கு வெளியில் இருக்கும் தனிப்பட்ட ஒருவருக்கு 40 ரூபாவும், ஒரு குடும்பத்திற்கு 80 ரூபாவும், சமூகசேவைப்பகுதி கொடுத்து வருகிறது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் காசநோயால் பாதிக்கப்பட்ட 1,130 பேர்களுக்கு மாதாமாதம் இந்த உதவிப்பணம் வழங்கப்பட்டு வருகிறது. யாழ்ப்பாண மாவட்டத்தில் மாதம் 66,180 ரூபா காசநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படுகிறது.

காசநோயால் பாதிக்கப்பட்டவர்கள், சமூகசேவை பகுதியினருடன் தொடர்பு கொண்டால், இந்த மதாந்த உதவிப் பணத்தை பெற்றுக் கொள்ளமுடியும்.

இப்பணத்தை மாதா மாதம் பெற்றுக் கொள்வதற்காக, காசநோயால் பாதிக்கப்பட்ட பலர் சிகிச்சைபெறுவதில் அதிக கவனம் செலுத்தாமலிருந்து வருவதாகவும் கூறப்படுகிறது.

# கி. மு. ச. சங்க வருடாந்தவிழா

சாவகச்சேரி, புதன்

முரசுமோட்டை கிராம சபை வருடாந்த விழா சமீபத்தில் முரசுமோட்டை குடியேற்றத்திட்ட அதிபர் திரு கே. கி. சம்பந்தர் தலைமையில் நடைபெற்றது. புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்- எஸ். துரைச்சாமி

[illegible]

காரியதரிசி- கே. [illegible]

தனாதிகாரி- கி. நடராசா.

# வயது வந்த பொற்கொல்லர்களுக்கு தங்கம் வழங்கவேண்டிய அவசியம்

## உள்நாட்டு மந்திரிக்கு பருத்தித்துறை எம். பி. விளக்கம்

கொழும்பு, புதன்

15 வயதை அடையும் பொற்கொல்லர்கள் சமூகத்தைச்சேர்ந்த மாணவர்களுக்கு தங்கம் வழங்கப்படவேண்டுமென்ற கோரிக்கை ஒன்றைப் பற்றி உள்நாட்டு மந்திரி திரு. டபிள்யு. தகநாயக்கா ஆராய்ந்துவருகிறார்.

இக்கோரிக்கையை திரு. தகநாயக்காவிடம் சமர்ப்பித்திருக்கும் பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் தங்கம் வழங்கப்படவேண்டியதற்கான காரணங்களை சென்ற வாரத்தில் மந்திரிக்கு தெளியப்படுத்தினார்.

புலோலி கிழக்கு பொற்தொழிலாளர்கள் சங்கம் உலவிட்ட அநேக பொற்கொல்லர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க திரு. துரைரத்தினம் உள்நாட்டு மந்திரியைப் பேட்டி கண்டு முக்கிய விஷயங்களைப் பற்றி பேச்சுவார்த்தை நடத்தினார்.

பேச்சு வார்த்தைகளின் போது பிரதானமாக எடுத்துக்கொள்ளப்பட்டது வயது வந்தமாணவர்களுக்கு தங்கம் வழங்கவேண்டுமென்பது. 15 வயதுவந்த பொற்கொல்ல சமூகத்தைச்சேர்ந்த இளைஞர்களுக்கு மற்றவர்களுக்கு வழங்கப்படுவதைப்போன்று தங்கம் வழங்கப்படவேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இக்கோரிக்கையின் காரணத்தை திரு. துரைரத்தினம் மந்திரியிடம் விளக்கிக்கூறும் போது பின்வரும் விபரங்களைத் தெரிவித்ததாக அறிய வருகிறது.

தங்க ஆபரண வேலைகளைச் செய்வதில் ஒருவர் பரிச்சயமடைய குறைந்தபட்சம் 5 வருடங்கள் வேண்டியிருக்கும். தற்போதைய முறையின்படி பாடசாலைப் படிப்பு முடிந்து தொழிலை ஆரம்பிக்கும்போது அத்தொழிலை ஆரம்பிப்பவர்கள் 20 வயதையடைந்துவிடுவார்கள். பின்னர் வேலையைப் பழகி சுயமாக தொழில் நடத்த 5 வருடங்கள் சென்றால் வயது 25 ஆகிவிடும் அதற்குப் பின்னர் தொழிலில் ஸ்திரமடையவும் காலதாமதமாகும். இதனால் தான் பொற்கொல்லர்கள் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் கஷ்டமடைகிறார்கள்.

இவ்வித கஷ்டநிலையைப் போக்குவதற்கு 15 வயதையடைந்தவர்களுக்கு தங்கம் வழங்குவது நல்லது. பாடசாலைப் படிப்பில்லாத ஓய்வு நேரங்களில் வேலையைப்பழகிகொண்டால் படிப்பு முடிந்ததும் அவர்கள் தொழிலை ஆரம்பித்துவிடலாம்.

# விரிவுரையாளரின் மனைவி தற்கொலை

பேராதனை, புதன்

இலங்கைப் பல்கலைக்கழக சட்ட விரிவுரையாளர் திரு. குணசேகராவின் மனைவியும், பௌத்த கலைக்களஞ்சியத்தின் உதவி ஆசிரியையுமான திருமதி லட்சுமி குணசேகரா நச்சுத்திராவகம் அருந்தி மரணமானார்.

அவர்களுடைய வீட்டில் குளியறைக்குள் மயங்கிய நிலையிற் காணப்பட்ட லட்சுமி கண்டி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது அங்கு மரணமானார். குணசேகரா தம்பதிகளுக்கு மூன்று குழந்தைகள் உள்ளன.

டாக்டர் வேலும்மயிலும் ரண சிகிச்சையின்பின் நச்சுத்திராவகம் அருந்தியதால் ஏற்பட்ட மரணம் என தெரிவித்தார்.

# பஸ்களுக்கும் இடநெருக்கடி!

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் பஸ்நிலையத்தில், பஸ்கள் தங்குவதற்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனால் பஸ்களை நிறுத்துவதற்கும், திருப்புவதற்கும் சாரதிக்கு பெரும் கஷ்டம் ஏற்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

அடுத்த வாரம் யாழ்ப்பாணத்திற்கு வரும் 20 இரட்டைத்தட்டு பஸ்கள் பஸ்நிலையத்தில் தங்குவதற்கு போதிய இடவசதியில்லாததால் யாழ்ப்பாணம் பஸ் டிப்போ அதிகாரிகளுக்கு பெரும் தலையிடியைக் கொடுத்துள்ளதாகவும் அறியப்படுகிறது.

தற்பொழுது பல பஸ்கள் பிரதானவீதி ஓரத்திலும் மீன் சந்தையை மறைத்தும் நிறுத்தப்பட்டிருப்பதால் பொது ஜனங்களுக்கும் பிரயாணிகளுக்கும் கஷ்டமேற்பட்டுள்ளது.

மேலும் 20 பஸ்கள் யாழ்ப்பாணத்திற்கு அடுத்தமாதம் வரவிருப்பதால் கூடிய சீக்கிரத்தில் பஸ்கள் தங்குவதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்ய வேண்டியது அவசியம் என டிப்போ உத்தியோகத்தர்கள் கருதுகின்றார்கள்.

# பிரபல சைத்ரீகர் மரணம்

பெங்களூர், மே 26

பிரபல சித்திரக்காரரான திரு. கே. வெங்கடப்பாநேற்று இங்கு காலமானார்.




உண்மையான லாகரின் சுவை எப்படியிருக்கவேண்டுமோ அப்படியான சுவையுடையது "திரீ கொயின்ஸ்"......

உலகத்திலேயே சிறந்த மோலற் — ஹொப்ஸ் ஆகியனவும், இலங்கையின் மிகச் சுத்தமான தண்ணீருங் கொண்டு, வடிதொழிலின் உயர்ந்த தரங்களுக்கமைய, முறைப்படி வடிக்கப்பட்டு, பக்குவம்பண்ணப்படுகிறது திரீ கொயின்ஸ்.

குளிர்ந்த திரீ கொயின்ஸ் லாகரைப் பரிமாறி உங்களையும் உங்கள் விருந்தினரையும் கௌரவியுங்கள். அது அதிசயிக்கத்தக்க திருப்தி தருவதைக் காண்பீர்கள்

மெக்கலம் புறூவெறிஸ் (சிலோன்) லிமிடெட்

விநியோகிஸ்தர்கள் :- ஷாவலாஸ் அன் கெட்ஜஸ் லிமிடெட், கொழும்பு 3.



## பாஸ்கெட்பந்தாட்ட பயிற்சியாளர் கோஷ்டி

குரும்பசிட்டி, புதன்

யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளின் பாஸ்கெட் பந்தாட்ட வீரர்களுக்கு பயிற்சி அளிக்கும் பொருட்டு அமெரிக்காவிலுள்ள ஸ்பிறிங்பீல்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பாஸ்கெட் பந்தாட்ட பயிற்சியாளர் கோஷ்டி ஜூன் மாதம் 20 ம் தேதி யாழ்ப்பாணம் வர விருக்கின்றது.

ஐக்கிய அமெரிக்க தகவல் இலாகாவினது இலங்கைக் கிளையினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் பயிற்சி முகாம் யாழ் மத்திய கல்லூரியில் அமைக்கப்படுமெனத் தெரிகிறது. பந்து விளையாட்டு வீரர்களை இரு மத்தியஸ்தர், இரு பயிற்சியாளர் ஆகியோரைக் கொண்ட இந்த அமெரிக்க பயிற்சியாளர் கோஷ்டி விரிவுரைகள், திரைப்படங்கள், விளையாட்டுப் பயிற்சி ஆகிய மூலங்களினால் யாழ் வீரர்களுக்கு மாத்திரமல்லாது கொழும்பு, கண்டி, மட்டக்களப்பு ஆகிய இடங்களிலும் பயிற்சி முகாம்களை அமைத்து வீரர்களுக்கு சிறந்த பயிற்சி அளிக்கும்.

## நேரு நினைவுதினம்

யாழ்ப்பாணம் வியாழன்

ஜவஹர்லால் நேரு மறைவு தினம் யாழ். மறுமலர்ச்சி மன்றத்தினரால் இன்று வியாழக்கிழமை மாலை 6-30 மணி தொடக்கம் திருநெல்வேலி கலாமன்ற மண்டபத்தில் நடாத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. சொற்பொழிவுகளும் கீதங்களும் இந் நிகழ்ச்சியில் இடம்பெறும்.


**REGAL — JAFFNA**
**NOW SHOWING**
Wayne Morris
in
**DESPERADO**
(Terrifying Acton Film)


## தீவுப்பகுதி கரபந்தாட்ட சாம்பியன்

ஊர்காவற்றுறை, புதன்

ஊர்காவற்றுறை 'றெஞ்செஸ்' விளையாட்டுக்கழகத்தினரால் நடாத்தப்பட்ட தீவுப்பகுதி கரபந்தாட்டப் போட்டியின் இறுதிப்போட்டி சென்ற சனிக்கிழமை ஊர்காவற்றுறை சனசமூகநிலைய மைதானத்தில் நடைபெற்றது. கரம்பன் கிழக்கு சனசமூகநிலையக் கோஷ்டிக்கும் புளியங்கூடல் மகாமாரிக் கோஷ்டிக்கு மிடையே போட்டி நடைபெற்றது.

ஆசிரியர் திரு. எம். நடராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். இரு கரும்பினரும் முற்பகுதியில் மிகத் திறமையாக விளையாடினர். இரு கோஷ்டியிலும் தீவுப்பகுதியைச் சேராத விளையாட்டு வீரர்களும் கலந்து கொண்டனர். இரு ஆட்டங்களிலும் கரம்பன் கிழக்கு சனசமூகநிலையக் கோஷ்டி வெற்றியடைந்தது. புளியங்கூடல் மகாமாரி கோஷ்டியினர் முதலாவது ஆட்டத்தின்போது 10 கோல்களும் 2-வது ஆட்டத்தின்போது 8 கோல்களும் எடுத்தனர்.

தீவுப்பகுதி சாம்பியனாக கரம்பன் கிழக்குக் கோஷ்டி தெரிவு செய்யப்பட்டது.

### வள்ளுவர் விழா


சாவகச்சேரி, புதன்

தென்மராட்சி இளந்தமிழர் மன்ற கைதடிக் கிளையினரின் செயற்குழுக்கூட்டம் நேற்று மாலை மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற பொழுது கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாசாலையில் வள்ளுவர்விழாவை நடாத்துவதென்றும் முக்கிய பேச்சாளர்களாக சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினத்தையும், உலகத் தமிழ்மன்றத் தலைவரும் கிளிநொச்சி எம். பி. யுமான பண்டிதர் கா. பொ. இரத்தினத்தையும் அழைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.


வெற்றிகரமான 2வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) நியூ (கும்பனித்தெரு)
விஜயா (மகிமைக்கள) விஜிதா (ஹட்டன்) தீவொளி (நுவரெலியா)
லக்ஷ்மி (இரத்தினபுரி) மோடோர்ன் (பதுளை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி பிற்பகல் 2-30, 6-30 9-30
சனி, ஞாயிறு 10-30 பி. ப. 2-30 6-30 9-30



★ சிவாஜி கணேசன்
★ எஸ்.எஸ். ராஜேந்திரன்
★ விஜயகுமாரி
மற்றும் பலர் நடித்த
பச்சை விளக்கு


## மென்பந்து விளையாட்டுப்போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாண மென்பந்து விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்பட்டு வரும் கிரிக்கெட் போட்டியில் ஒ. எல். ஆர். ஸ்கைலாக்ஸ் விளையாட்டுக்கழகம் விளையாடிய மூன்று போட்டிகளும் யாருக்கும் வெற்றிதோல்வியின்றி 'டை' யாக முடிவடைந்தது. இக்கழகத்தோடு யங்டைகேர்ஸ், கிறீன்பீல்ட், டவர் விளையாட்டுக்கழகங்கள் போட்டியிட்டன.

போட்டி முடிவுகள் வருமாறு:

ஒ. எல். ஆர். ஸ்கைலாக்ஸ் எதிர் யங்டைகேர்ஸ் 55 ; 33-83 ; 54 ஒ. எல். ஆர். ஸ்கைலாக்ஸ் எதிர் கிறீன்பீல்ட் 61 ; 29-59 ; 81 ஒ. எல். ஆர். ஸ்கைலாக்ஸ் எதிர் டவர்களப் 29 ; 145-59 ; 115.

## மீனவர்களுக்கு குடியேற்றத் திட்டம்

வல்வெட்டித்துறை, புதன்

வல்வெட்டித்துறைக்கு அருகாமையிலுள்ள பொலிகண்டிக் கிராமத்திலுள்ள மீனவர்களுக்கான குடியேற்றத் திட்டமொன்றை அரசினர் மீன்பிடி இலாகா பூர்த்தி செய்துள்ளது.

இத்திட்டத்திலுள்ள பற்றை செடிகளையும் மரங்களையும் வெட்டி துப்பரவாக்கும் வேலை நேற்று சிரமதானம் மூலம் நிறைவேற்றப்பட்டது. இவ்வியக்கத்தில் வல்வை தமிழரசு வாலிபமுன்னணி, கம்யூனிஸ்ட் வாலிபமுன்னணி, ரேவடி விளையாட்டுக்கழகம், செடியகாடு, உதயசூரியன், றெயின்போ, குச்சம் சைனிங், திரவிட விளையாட்டுக்கழகம், வல்வை சனசமூக சேவா நிலையம், வாசிகசாலை நூல்நிலையம் முதலியன பங்கு பற்றின. வடமராட்சி காரியாதிகாரி திரு. ஜே. டி. ஆர்னோல்டினால் ஆரம்பித்துவைத்த இவ்வியக்கத்தில் பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினமும் கலந்துகொண்டார்.

இப்பணியில் ஈடுபட்டிருக்கவர்களுக்கு பொலிகண்டியைச் சேர்ந்த திரு. ரி. செல்லையாகதிரமலை மதியபோசன விருந்தளித்தார்.

## வாலிபமுன்னணி நிர்வாகிகள்

சாவகச்சேரி, புதன்

சமீபத்தில் நடைபெற்ற சாவகச்சேரிவடக்கு வாலிபமுன்னணியின் புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்- திரு வி. என். நவரத்தினம் (சாவகச்சேரி எம் பி.) தலைவர்-கே. திருச்சிற்றம்பலம் உபதலைவர்-என். ஸ்ரீசித்த பரிசாரியதரிசி-என். ஐ. குணரத்தினம் உபகாரியதரிசி- பி. சித்தியானந்தன், தனாதிகாரி-எஸ். சிவப்பிரகாசம். 9 பேர் கொண்ட ஒருநிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## வானொலி நிகழ்ச்சிகள்

### வியாழன் 27-5-65

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

காலை 6-45 ஞானாஞ்சலி, 6-50 சைவசிந்தனை, 6-55 இஸ்லாமியசிந்தனை, 7-00 பக்திப் பாடல்கள், 7-30 சேர்ந்திசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-000 பிறந்த தினமும் துக்கள், 5-15 மாணவர் மன்றம், 5-45 திரை இசை 6-45 இசை பயிற்சி, 7-00 ...

7-45 நாடகம் — 'அண்டன் கந்தையா'. 8-00 மூலவிசி ழ்ச்சிகள், 9-15 வயலின் 9-30 நேயர்விருப்பம், 10-00 நிலைய ஒலிப்பதிவுகள்.

## சமயப் பிரசங்கங்கள்

யாழ்ப்பாணம் வியாழன்

அகில இலங்கைப் பொதுஜன சேவைச்சங்க சமயப் பிரசார சபையினரால் கீழ்க்கண்ட தேவஸ்தானங்களில் சமயப் பிரசங்கங்கள் நாளை நடைபெற இருக்கின்றன.

வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் மாலை 5 மணி முதல் மகாபாரதம் பிரசங்கத் தொடரில் 'அருச்சுனர்வனம்' என்னும் பொருள்பற்றி கதாப்பிரசங்கம் நடைபெறும்.

நல்லூர் கிழக்கு முத்துவிநாயகர் ஆலயத்தில் திரு. த. சுப்பிரமணியம் "சுந்தரர் அருள்வாழ்க்கை" என்னும் பொருள் பற்றியும் நாயன்மார்கட்டு ஸ்ரீ ராஜராஜேஸ்வரி ஆலயத்தில் வித்துவான் திரு. பொ. கந்தையா "சமய மகிமை" என்னும் பொருள்பற்றி கதாப்பிரசங்கங்கள் நிகழ்த்துவர்.

## சமூக நலனுக்கு சங்கம்

கிளிநொச்சி, புதன்

கிளிநொச்சியினதும் இதைச் சார்ந்த இடங்களினதும் கல்வி அபிவிருத்தி, சுகாதார அபிவிருத்தி, போக்குவரத்து அபிவிருத்தி, குடியேற்ற நீர்ப்பாசனத்திட்டங்களின் அபிவிருத்தி படித்த வேலையற்ற இளைஞர்களது பிரச்சினை முதலியனவற்றை தீர்க்கும் முகமாகவும் அபிவிருத்தி செய்யும் நோக்கமாகவும் ஓர் கிளிநொச்சி பொருளாதார அபிவிருத்திச் சங்கத்தை இப்பகுதிமக்கள் ஸ்தாபிப்பதற்கு ஏற்றஒழுங்குகளைச் செய்துகொண்டுவருவதாகத் தெரிய வருகிறது. இச்சங்கத்தைஸ்தாபிப்பதன் மூலம் இப்பகுதி மக்கள் பெரிதும் பயனடைவார்களென சங்க ஸ்தாபகர்கள் தெரிவித்தனர்.

## மார்ட்டின்லூதர் பற்றிய சொற்பொழிவு

யாழ்ப்பாணம் வியாழன்

அமெரிக்க அகிம்சை இயக்கத் தூதுவரான 'மார்ட்டின் லூதர் கிங்' பற்றிய சொற்பொழிவு நாளை மாலை 6 மணிக்கு யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கை அமெரிக்க கலாசார நிலைய மண்டபத்தில் நடைபெற இருக்கிறது. யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் திரு ராஜன் கதிர்காமர் இச்சொற்பொழிவைநிகழ்த்துவார். திரு. எஸ். ஆர். கனகநாயகம் தலைமை தாங்குவார். சொற்பொழிவின்பின்னர் மனித உரிமை கோரி சென்றவருடம் ஆகஸ்ட் மாதம் 28-ந் தேதி நீக்ரோக்கள் வாஷிங்டனில் நடத்திய பிரபல்யம் வாய்ந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம்பற்றிய செய்திப் படமொன்று காண்பிக்கப்படும்.

## அதிக நீர்ப்பாசனம்

கொழும்பு புதன்

குடியேற்றப் பகுதிகளில் அதிக நீர் பயிர்ச் செய்கைக்காக விநியோகிக்கப்படவிருக்கின்றது.

காணி நீர்ப்பாசன மின்சார மந்திரி திரு. ஸி பி டி. சில்வா —விவசாய—நீர்ப்பாசனப் பகுதிகளின் உத்தியோகத்தர்களுடன் கூடிய மாநாட்டில், அதிக நீர் விநியோகம் செய்து விவசாய உற்பத்தியைப் பெருக்கும்படி கேட்டுள்ளார்.

ஓர் ஆண்டிற் குறைந்தது 45,000 ஏக்கர்களுக்கு விவசாயஞ் செய்யக்கூடிய நீர் விநியோகஞ் செய்வதற்கான ஆயத்தங்களை மேற்கொள்ளும்படி மேற்படி மகாநாட்டிலே அதிகாரிகளை போது மந்திரி கேட்டுள்ளார்.

வடிகால்கள் வெட்டுவதற்காகவும் மந்திரி அரசாங்க அதிபர்களைக் காணவிருக்கின்றார்.


அவரி விளம்பரம்

### வாடகைக்கு அல்லது விற்பனைக்கு

2-ம் குறுக்குத்தெருவில் 83-ம் இலக்கங்கொண்ட கட்டிடம் வாடகைக்கு அல்லது விற்பனைக்கு இருக்கிறது. சகலதேவைகளுக்கும் பயன்படக்கூடியது. விபரங்களுக்கு: க. பத்மநாதன், 10, பிரப்பங்குளம் வீதி, யாழ்ப்பாணம். 324

### குத்தகைக்கு
### INDUSTRIAL ESTATE

கைத்தொழில் ஸ்தாபனங்கள் அமைக்க தெருமுகப்புடன் காணி வருஷம் பரப்புக்கு ரூபா 80, விபரங்களுக்கு: திருஞானசம்பந்தர், யாழ்ப்பாணம் Phone: 7081, அல்லது கைத்தொழில் நிறுவனம் சாவற்கட்டு. 323

### விற்பனைக்கு

B. S. A. பான்ரம் E Y 6821 விபரங்களுக்கு: J. R. மில்ஸ், கொடிகாமம். 325

இயந்திரங்களால் இயக்கப்படும் 30×9 1/2, 28×8 1/2 27 1/2 × 8 (மூன்று) அளவுகளைக் கொண்ட நைற்லண்டர் மாதிரி ஐந்து புதிய வள்ளங்கள்- இரண்டு இலுப்பை பலா மரத்தாலும் மூன்று பனாமரத்தாலும் செய்யப்பட்டவை- இயந்திரங்கள் பூட்டப்படாதவை. கடன் வசதி ஒழுங்குகள் செய்யலாம். வடமராட்சி கிழ் மாகாணக் கடலில் பாவனைக்கு மிகவும் உகந்தவை. தற்போது இந்த வள்ளங்கள் பல பாவிக்கப்படுகின்றன. விபரங்களுக்கு எழுதவும்.

G A Peter Fernando, 86, Delasalle Street, Matwal 245

### தேவை

தையல்வேலை செய்யக்கூடிய பெண்கள் தேவை, டிப்போசிட் பணம் ரூபா 500/- ரொக்கம் கட்டக்கூடியவர்களுக்குத் திறமைக்கேற்ற மாதச் சம்பளம் கொடுக்கப்படும். 28, 29ம் திகதிகளில் நேரில் சமுகம்கொடுக்கவும். கைத்தொழில் பகுதி, C/o. தமிழ்நேசன் பத்திரிகை அலுவலகம், 80, 82 பேங்ஷால் வீதி, யாழ்ப்பாணம். 326

### காணவில்லை

க. சிவலோகநாதன். சி. மகேஸ்வரி, சி. பாலசுப்பிரமணியம், சி. தேவராசா, சி. இராசேந்திரா, சி. யோகராணி, சி. கமலராணி, சி. கிருபாகரன் ஆகியபெயர்களையுடைய கூட்டுப்பனைகளை காணவில்லை. கண்டெடுப்பவர்கள், ப. சண்முகம், திருநெல்வேலி ஸ்டோர்ஸ், திருநெல்வேலி வடக்கு அல்லது திருநெல்வேலி கிராம சேவையாளரிடம் ஒப்படைக்கவும். 312

### சிங்கள வகுப்புக்கள்

சிங்கள வகுப்புக்கள் மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும், உத்தியோகஸ்தர்களுக்கும் தனித்தனி நடாத்தப்படும். நேரில் விண்ணப்பிக்கவும். மா. புவனேந்திரன் வர்த்தகக்கல்வி நிலையம், திருநெல்வேலி. 314

தொய்வு, கசம், நீரழிவு, வெண்ளை முதலிய பல வகையான வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இறும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்றுயர்ந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தர், கைலாய பிள்ளையார்கோவிலடி, யாழ்ப்பாணம்.


## பாகிஸதான் ஆட்சேபம்

கராச்சி, மே 20

ஷில்லாங்கிலுள்ள பாகிஸ்தான் தூதராலயத்தை மூடும்படி இந்தியா உத்தரவிட்டிருப்பதை பாகிஸ்தான் ஆட்சேபித்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீண்டகால போக்குவரத்து சேவைத் திட்டம்

## மந்திரி நடவடிக்கை

பம்பலப்பிட்டி, செவ்

நீண்டகால போக்குவரத்து சேவைத் திட்டமொன்றை வகுப்பதற்காக போக்குவரத்து மந்திரி திரு ஈ எல் பி குருல்லே விசேஷ குழுவொன்றை நியமிக்க முடிவு செய்துள்ளார். இக் குழுவில் ஐ நா நிபுணர் ஒருவரும், இலங்கையின் போக்குவரத்து சேவையைப்பற்றி நன்கு அறிந்த நான்கு அதிகாரிகளும் அங்கம்வகிப்பார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

புதுக்குழு செய்யவேண்டிய திட்டங்கள் பற்றிய குறிப்புகளை இன்று மந்திரி, அமைச்சின் அதிகாரிகளுக்கு விளக்கமாக எடுத்துச்சொன்னார் போக்குவரத்துக்கு வசதியாக ரஸ்தாவை அமைப்பது புகைவிரதப்பாதைகள், இன்னும் போக்குவரத்துக்குத் தேவையான அம்சங்கள் குறித்து நீண்ட அறிக்கையை சமர்ப்பிக்கும்படி திரு. குருல்லே அமைச்சின் அதிகாரிகளிடம் கேட்டுள்ளார். தேவைக்குக் கூடுதலான போக்குவரத்துச் சேவையை நிறுத்தி நாட்டின் பொருளாதாரத்தை வளப்படுத்துவதற்குத் தக்கமுறையில் திட்டமிடப்பட்ட போக்குவரத்துச்சேவையை ஏற்படுத்தும்வகையில் அறிக்கை தயாரிக்கப்படவேண்டுமென்றும் போக்குவரத்துமந்திரி அமைச்சின் அதிகாரிகளிடம் மேலும் அறிவித்துள்ளார்.

## லண்டன்பயணம்

பம்பலப்பிட்டி, செவ்

சனப்பிரதிநிதிகள் சபை சபாநாயகர், ஸேர். அல்பேர்ட் பீரிஸ், செனற்சபைத் தலைவர், தோமஸ் அமரசூரிய ஆகியோருக்கு வெளிநாட்டுப்பயணப் 'பாஸ்போர்ட்' வழங்கப்பட்டுள்ளன.

இவர்கள் லண்டனில் நடைபெறவிருக்கும காமன்வெல்த் மகாநாடு ஒன்றிற் பங்குபற்றுவதற்காக, லண்டன் செல்லவிருக்கின்றனர்.

## மந்திரிக்கு பாராட்டு

குரும்பசிட்டி, செவ்

மசிகிட்டி கிராமசபையினது மாதாந்தக் கூட்டம் திரு சி, அருணாசலம் தலைமையில் நடைபெற்ற போது தேசிய அரசாங்கத்தின் ஸ்தலஸ்தாபன மந்திரியாக திரு மு, திருச்செல்வம் தெரிவு செய்யப்பட்டமை குறித்து அவருக்கு பாராட்டு தெரிவிப்பதெனவும், கிராம சபை மந்திரிக்கு சகலவிதமாக ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

ஸ்தலஸ்தாபன மந்திரியை கிராமசபைக்கு உத்தியோக பூர்வமாக அழைத்து வெகுவிரைவில் அவருக்கு கிராமசபை சார்பில் விருந்துபசாரம் நடத்துவதெனவும் தீர்மானம் செய்யப்பட்டது.

## புதிய பஸ்சேவை

சாவகச்சேரி, செவ்வாய்

கொடிகாமத்திலிருந்து கச்சாய், அல்லாரை வழியாக சாவகச்சேரி வந்து அங்கிருந்து தனங்கிளப்பு, தச்சன்தோப்பு, நாவற்குழி வழியாக யாழ்ப்பாணத்திற்கு ஒரு புதிய பஸ் சேவையை இலங்கைப் போக்குவரத்துச் சபையினரால் விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

சாவகச்சேரி எம். பி திரு. வி என் நவரத்தினத்தின் வேண்டுகோளுக்கிணங்கவே இந்த பஸ சேவை ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

## பிரதமர் கலந்துகொள்ள மாட்டார்

கொள்ளுப்பிட்டி, செவ்

ஜூன் மாதம் 28-ந் திகதி அல்ஜியர்ஸில் நடைபெறவிருக்கும் ஆபிரிக்க—ஆசியத் தலைவர்கள் மகாநாட்டுக்குப் பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயகா செல்லமாட்டார் என அறியப்படுகிறது.

பிரதமர்களின் காமன்வெல்த் மாநாடு ஜூன் மாதம் 25 ந் திகதி நடைபெறுவதாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது. அதற்கு பிரதமர் திரு. டட்லி சேனநாயகா செல்லவிருக்கிறார்.

நீதிமந்திரி செனட்டர் போலி விஜேமானே குறிப்பிட்ட ஆபிரிக்க—ஆசிய மாநாட்டுக்காக அல்ஜியர்ஸ்செல்லவிருக்கின்றார்

கம்யூனிஸ்ட் சீனப் பிரதமர் சூ-என-லாயும், அவருடன் வெளிநாட்டமைச்சர் சேங்-யி உட்பட பல பிரமுகர்களும் இம் மாநாட்டுக்காக அல்ஜியர்ஸ் செல்லவிருப்பதால், மாநாட்டு அமைப்பாளர் தமது அழைப்புக்களை மலேசியா, சோவியத்யூனியன் ஆகிய நாடுகளுக்கும் அனுப்பியுள்ளார். இந்த மாநாட்டில் எல்லா வெளிநாட்டு மந்திரிகளும் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

# இரத்மலானையில் இந்துக்களுக்கு இருப்பிடவசதி

கொழும்பு, புதன்

இரத்மலானை இந்துக்கல்லூரிக்கு அருகாமையிலுள்ள இந்துவித்தியாவிருத்திச் சங்க விடுதியில் பாடசாலை மாணவர்களைத்தவிர்ந்த பிறமாணவர்களும் இரத்மலானையிலும் சுற்றுப புறங்களிலும் உத்தியோகம் பார்க்கும் இந்துக்களும் தங்குவதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

இரத்மலானைப் பகுதியையும் அதையடுத்த இடங்களையும் சேர்ந்த பலரின் கோரிக்கைக்கிணங்க இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன இ-வசதியும் இருப்பிடவசதியும் தாராளமாகவுள்ள இந்த இந்து வித்தியாவிருத்திச் சங்கவிடுதியை இன்னும் அபிவிருத்தி செய்ய ஏற்பாடுகள் நடைபெறுகின்றன இதன் ஆரம்ப வேலையாக அரசாங்கத்தில கடமையாற்றி இளைப்பாறிய ஒருவர் விடுதியின்மேற்பார்வை அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்,

ஆகக குறைநத அளவு செலவில் இங்கு தங்கியிருப்பவர்களுக்கு திருப்திகரமான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டியதுதான் விடுதி நிர்வாகிகளின் நோக்கம் என்று அந்த அதிகாரி தெரிவித்தார். வை.எம்.சி.ஏ போன்ற அமைப்பில் இவ் விடுதியை நடத்துவதற்கான திட்டம் தயாரித்துக்கொண்டிருப்பதாகவும் அவர்கூறினார்,

மூன்று நேரசாப்பாடு வகைகளைத் தயாரிப்பதற்கும் சுகாதார முறைப்படி அவைகளை வழங்குவதற்கும் புதிய முறைகள அனுஷ்டிக்கப்படுகின்றனவாம்.

மூன்று ஏக்கர் காணியில் அமைக்கப்பட்டிருக்கும் இந்த விடுதியில் தங்குபவர்களின் தேகாரோக்கியத்திலும் கவனம் செலுத்தப்படவிருக்கிறது இதற்கான உடற்பயிற்சி விளையாட்டுக்களுக்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது.

## இலங்கையருக்கு..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைப்பிரஜைகள் அனைவருக்கும் அடையாள அட்டைகள் வழங்குவதற்கு நாட்டின் இன்றைய பொருளாதார நிலை இடமளிக்க மாட்டாதென்பதுடன் இந்நாட்டுப் பிரஜைகளை அடையாள அட்டைகள் வைத்திருக்கும்படி கேட்பது அவர்களை அவமானப்படுத்துவதாகுமென்றும் அந்த மகஜர் கூறுகிறது.

## பலியை நிறுத்தி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டபோதிலும் பலியிடும் வழக்கத்தை மீண்டும் அங்கு ஏற்படுத்த சில விஷமிகள் முயற்சிசெய்வதைத் தடைசெய்யும் பொருட்டு ஆலயமுகாமையாளர் வலிவடக்கு காரியாதிகாரி மூலம் காங்கேசன்துறைப் பொலிசாருக்குப் புகார் செய்துள்ளார் எனத் தெரிகிறது.

# ஒரு எம். பி.க்குபதில் 3 எம். பி.க்கள்

யாழ்ப்பாணம், புதன்

நல்லூர் எம் பி. டாக்டர் இ. மு. வி. நாகநாதன் சத்திர சிகிச்சைக்காக லண்டன் சென்றுள்ளதால், அவர் தாயகம் திரும்பும்வரை நல்லூர்த் தொகுதி பொதுமக்களின் தேவைகளை அயல்தொகுதி எம். பி க்களான திரு. சி. கதிரவேற்பிள்ளையும், திரு வி தர்மலிங்கமும், தேவையேற்படின் திரு. எஸ ஜே. வி செல்வநாயகமும் செய்வார்கள் என அறியப்படுகிறது

டாக்டர் நாகநாதன் லண்டன் சென்றுள்ளதால் அவரது தொகுதிமக்களின் தேவைகளை கவனிக்க கட்சி ஒருவரை நியமிக்கவேண்டும் என வண்ணார்பண்ணை கிளை, தமிழரசுக்கட்சித் தலைவர் திரு: எஸ். ஜே. வி. செல்வநாயகத்துக்கு கடிதம் எழுதியிருந்தது. இதைத் தொடர்ந்து கோப்பாய் எம் பியும் உடுவில் எம் பியும், தேவையேற்படின் தாமும் அவ்வேலையை கவனிப்பதாகவும் திரு செல்வநாயகம் தெரிவித்துள்ளதாகத் தெரிகிறது

# மகனின் மரணம் பற்றி தந்தை சந்தேகம்

## இயற்கை மரணமெனத் தீர்ப்பு

யாழ்ப்பாணம், செவ்

காலஞ்சென்ற தனது புதல்வனின் மரணம் திட்டமிட்டுச் செய்யப்பட்ட ஒரு கொலையாக இருக்கலாமென்று தாம் சந்தேகிப்பதாக திடீர்மரண விசாரணையொன்றில் சாட்சியமளித்த துடாகேவகே குணசேகரா என்பவர் தெரிவித்தார.

கொக்குவிலில் இளைப்பாறிய டாக்டர் செல்லையா என்பவரின் வீட்டில் வேலையாளாகப் பணியாற்றிய களுவாளையைச் சேர்ந்த எல தர்மதாஸா (வயது 18) என்ற சிறுவனின் மரணவிசாரணையை யாழ்ப்பாணப் பகுதி திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. ஏ, அமிர்தலிங்கம நடத்தினார்.

செல்லையா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

"களுவாளைபிட்டிய அளவைப் பகுதியில் உதவி சுப்பிரிண்டாகப் பணியாற்றும் எனது மருமகன் இராஜரத்தினம், காலஞ்சென்ற சிறுவனை இங்கு கூட்டிவந்து என் வீட்டில் வேலைக்கு அமர்த்தினார். என்னிடம் அவர் வயிறு வலி என்று தெரிவித்ததைதொடர்ந்து அவரை யாழ்ப்பாணம் பெரியாஸபத்திரியில் அனுமதித்தேன். அங்கு அவர் மரணமானார்"

இறந்தவரின் தகப்பனார் துடகேவாகே குணசேகரா சாட்சியமளிக்கையில் கூறியதாவது;-

"எனது மகன் இயற்கையாக இறந்திருக்கமுடியாது, ஏனெனில் அவர் இறப்பதற்கு முதல் எனக்கு இரண்டு கடிதங்கள் எழுதியிருந்தார் கடைசிக்கடிதத்தில் தம்மைவந்து கூட்டிக்கொண்டுபோகும்படி கேட்டிருந்தார் நான் இராசரத்தினத்திடம் எனது மகனை ஒப்படைக்கும்போது விரைவில் எனக்கும் ஒரு வேலை செல்லையாவிடம் வாங்கித் தரும்படி கேட்டிருந்தேன் அவரும் வாங்கித்தருவதாகக் கூறியிருந்தார் எனது மகன் எழுதிய கடைசிக்கடிதத்தில் எனக்கு வேலை கிடைக்கமாட்டாதென்று எழுதியிருந்தார் சம்பவம் நடந்ததினம் எனக்கு வேலைதருவதாகச்சொல்லி களுவாளையிலிருந்து இராஜரத்தினம் தமது காரில் யாழ்ப்பாணம் கூட்டிவந்தார் ஆனால் இங்கு கூட்டிவந்தபிறகுதான் எனது மகன் இறந்துவிட்டதும், வைத்தியப்பரிசோதனை நடந்ததும் தெரியவந்தது இவைகளிலிருந்து எனது மகன் கொலைசெய்யப்பட்டிருக்கிறார் என சந்தேகிக்கிறேன்".

உதவி சட்டவைத்திய அதிகாரி திரு சுப்பிரமணிய மளிக்கையில் மரணத்துக்குக் காரணம் வயிற்றுக்கோளாறு எனத் தெரிவித்தார்

இயற்கைமரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது காலஞ்சென்றவரின் தந்தைக்கு திடீர்மரண விசாரணை அதிகாரி ஆறுதல் கூறினர்

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## தாமப்பண உதவி

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண மாவட்டத்தில் சமூகசேவைப் பகுதியினரால் சுமார் 10,000 பேர்களுக்கு மாதாந்த பொதுசன உதவியாக 10,8085 ரூபாய் வழங்கப்படுகிறது. இது தவிர, மிகவும் அவசரமாக மாதாந்த பொதுசன உதவி வழங்கவேண்டிய 300 பேர்களுக்கு, போதியளவு நிதியில்லாத காரணத்தினால் உதவி யளிக்கப்படவில்லை.

இதுவரை மாதாந்த உதவிப்பணம் வழங்கப்படாதவர்கள் தங்கள் நிலைமையை விளக்கி சமூகசேவைப் பகுதியினருக்கு பல கடிதங்கள் எழுதியுள்ளார்களென்றும் நிதிநிலைமை காரணமாகவே. இவர்கள் பலமாதங்கள் காத்திருக்க வேண்டியநிலைமை ஏற்பட்டதாகவும் தெரியவருகிறது.

## பாதையின் அவலநிலை

சுழிபுரம், செவ்வாய்

காரைநகர் - ஊர்காவற்றுறைக்கிடையே சேவைக்கு விடப்பட்ட பாதை மிகவும் அவலநிலையில் உள்ளது. பாதையில் ஏற்றி இறக்கப்படும் வாகனங்கள் பலத்த சேதத்திற்குள்ளாகின்றன. நேற்றையதினம் வலிகாமம் மேற்கு பாற்பண்ணைக்குச் சொந்தமான மோட்டார் வண்டியொன்று பலத்த சேதத்திற்குள்ளான சம்பவம் ஒன்று நடைபெற்றுள்ளது. இவ்விதம் தினமும் பல மோட்டார் வண்டிகள் சேதத்திற்குள்ளாதவாக அறியப்படுகின்றது. இந்நிலை மேலும் நீடிக்காமல் உடனடியாக கவனிக்குமாறு பொதுமக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வேண்டியுள்ளனர்.

## பரிசோதகர் திடீர் மரணம்

யாழ்ப்பாணம், செவ்,

ரயில்வே இன்ஸ்பெக்டர் ஜே. ஈ. எச். சில்வேரா யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திலிருந்த சமயம் நெஞ்சில் வலியேற்பட்டதன் காரணமாக யாழ்ப்பாணம் பெரியாஸபத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

இதுகுறித்து யாழ்ப்பாணம் திடீர் மரண விசாரணை அதிகாரி திரு ஏ. அமிர்தலிங்கம் மரணவிசாரணை நடத்தினர்.

யாழ்ப்பாணம் புகையிரத நிலைய உதவி அதிபர் திரு. பி, தர்மராசா புகையிரத எஞ்ஜின் டிரைவரான இறந்தவரின் சகோதரர் என். டி. சில்வா ஆகியோர் சாட்சியமளித்தனர். மரண விசாரணை அதிகாரி இயற்கை மரணமெனத் தீர்ப்பளித்தார்.

பம்பலப்பிட்டி, செவ்

வெளிநாட்டுப் பிரயாணிகளுக்கு விசா அளிக்கும்பொழுது கவனமாக இருக்கும்படி இலங்கைஸ்தானிகர் காரியாலயத்தை அரசாங்கம் கேட்டுள்ளது

இந்த ஸ்தானிகர் காரியாலயங்களின் தலைவர்கள் வெளிநாட்டார் போதிய தகவல்கள் திருப்தியளிக்கும் வகையில் தராதவிடத்து அவர்களுக்கு உத்தரவுகளை வழங்கக்கூடாதெனவும் போதிக்கப்பட்டுள்ளனர்.

## ஆனால் இங்கு இப்படி...!

தொல்புரம் மத்தியிலுள்ள ஆதிமுத்துமாரி அம்மன் கோயிலில் இவ்வருடமும் மிருகபலி நடைபெறுவதை நிறுத்தும் முயற்சி வெற்றியளிக்கவில்லை. பலர் ஆலயமுகாமையாளருக்கு வேண்டுகோள்விடுத்தும மிருக பலியை நிறுத்துவதற்கு அவரிடமிருந்து சாதகமான பதில் எதுவும் இதுவரை கிடைக்கவில்லையாம்.

சுழிபுரம் புதன்

பண்ணாகம் தெற்கு இளம் விவசாயிகள் கழக வருடாந்தக் கூட்டம் ஸ்ரீ முருகன் சனசமூக நிலைய மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. ப. இராசகுரு தலைமையில் நடைபெற்றது. கமத்தொழில் உத்தியோகத்தர் திரு. அ. குமாரசாமியும் கலந்துகொண்டார், புதிய உத்தியோகத்தர் விபரம் வருமாறு:—

தலைவர்: திரு. ப. இராசகுரு. உபதலைவர்; திரு. க. இராசதுரை. காரியதரிசி: திரு. கி. விநாயகமூர்த்தி, உபகாரியதரிசி திரு. தி. நடராசமூர்த்தி, தனாதிகாரி: திரு. மா. இரகுநாதன், நிர்வாகசபை உறுப்பினர்: திரு. ஆ குணரத்தினம். திரு. மா. சிவரத்தினம்.

## யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரி மாணவர் பகுதி

### ஜி. சி. ஈ. உயர்தர வகுப்புகள்

ஜி. சி ஈ, சாதாரணப் பரீட்சையில் ஏககாலத்தில் ஏதாவது பாடங்களில் மூன்று திறமைச் சித்திகளுடன் ஐந்து பாடங்களில் அல்லது இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்தோர் ஜி. சி. ஈ. உயர்தர முதலாம் வருட வகுப்புகளில் சேரலாம்.

இதுபற்றிய விபரங்களை மே மாதம் 29-ந் திகதி சனிக்கிழமை காலை 9—12 மணிகளுக்கிடையே நேரடியாக அறிந்து கொள்ளலாம்.

பதிவாளர்

வட்டுக்கோட்டை

27—5—65 183

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட்டுக்காக ... யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 63-ம் இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு மே மாதம் 27-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org